# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றறிக்கை
# Performance Report
# 2014





ධීවර හා ජලජ සම්පත් දෙපාර්තමේන්තුව

கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்

**Department of Fisheries & Aquatic Resources**

# பொருளடக்கம்

பக்க இலக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | ii |
| 1. கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் | 01-06 |
| 2. கடற்றொழில் முகாமைத்துவப் பிரிவு | 07-09 |
| 3. கடற்றொழில் கைத்தொழிற் பிரிவு | 10-12 |
| 4. கடற்பொருள் உற்பத்தி தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு | 13-15 |
| 5. கண்காணிப்பு, கட்டுப்படுத்தல் மற்றும் தேடுதல் நடவடிக்கைப் பிரிவு | 16-18 |
| 6. நிர்வாகப்பிரிவு | 19-25 |
| 7. நிதிப்பிரிவு | 26-29 |

# முன்னுரை

கடற்றொழில் கைத்தொழில் எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு மிக முக்கிய பங்களிப்பை வழங்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதோடு, எமது மக்களின் போசாக்குத் தேவைப்பாடுளையும் பூர்த்தி செய்கின்றது. மேலும் கிட்டத்தட்ட இரண்டு (02) மில்லியன் மக்களின் சீவனோபாயமாக அமைந்துள்ளது.

எமது கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களமானது பல்வேறு வகையான முறைமகளை கையாள்வதன் மூலம் இக்கைத்தொழிலின் மேம்படுத்தலுக்கும், முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான முக்கிய நிறுவனமாக செயற்படுகின்றது.

தற்போது, எமது திணைக்களத்தின் முக்கிய கவனமாகவுள்ளது, எமது மீனவர்களை சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் தேவைப்பாடுகளுக்கு அமையச் செயற்பட்டு, பொறுப்பான கடற்றொழில் கைத்தொழிலை மேற்கொள்ள செய்வதேயாகும். எவ்வாறாயினும், இவ்வாண்டில் மீனவ மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான பெருமளவிலான நடவடிக்கைளையும் நிகழ்ச்சித்திட்டங்ளையும் எம்மால் செயற்படுத்த முடிந்தது. இவ்வாறு அவர்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதன் ஊடாக உயர்தர மீன் அறுவடையை அடையவல்ல அவர்களின் இயலுமையை வளர்க்க இயலுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மீன்பிடிக்கலத்தொகுதிகளினதும், மீன்பிடி உபகரணங்களினதும் முறையான முகாமைத்துவத்தின் ஊடாக எமது வரையறைக்குட்பட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்ளை எமது வருங்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாப்பது, இக் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

2014 இல் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை மிகச்சிறந்த முறையில் எமது திணைக்களம் எய்த முடிந்துள்ளது. ஆயின், இன்றைய செயற்பாடுகளையும், முன்னேற்றங்ளையும் தகவல்தொழில்நுட்பத்துடன் இணைப்பதன் மூலம் மேலும் சிறந்த பலாபலன்களை அடைய முடியமென நான் எண்ணுகிறேன்.

எம்.சி.எல். பர்னாந்து
பணிப்பாளர் நாயகம்

கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம்,

புதியசெயலகம், மாளிகாவத்தை,

கொழும்பு-10,

2017.10.10.

# கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்

# செயலாற்றறிக்கை - 2014

## 1.1 தூரநோக்கு

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் வளங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு முறையான பங்களிப்பை வழங்குவதற்கு கடற்றொழில் கைத்தொழிலை தொடர்ந்து அபிவிருத்தி செய்தல்.

## 1.2 நோக்கம்

- தேசிய, சர்வதேச சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கை முகாமைத்துவம், முறையாக மேற்கொள்ளல், பாதுகாப்பு மற்றும் தொடர்ந்து அபிவிருத்தி செய்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகளை ஊக்குவித்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச கடலில் மீன் வளங்களை அறுவடை செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.
- மீனவ˙ சமூகத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தல்.
- சர்வதேச பிரமாணங்களுக்கு அமைவாக ஏற்றுமதிக்கான மீன் உற்பத்தியின் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- பின் அறுவடையின் போது ஏற்படும் வீண் விரயத்தைக் குறைத்தல் மற்றும் தேசிய மீன் உற்பத்திகளின் குணப் பண்புகளை மேம்படுத்தல்.

## 1.3 உபாய வழிகள்

- 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க கடற்றொழில் (வெளி நாட்டு மீன்பிடிப் படகு) சட்டம் தற்போதைக்கு சார்பான மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் பிரிவின் அபிவிருத்திக்கு தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக் சமூகத்தினரின் ˙முதலீட்டை ஊக்குவிப்பதற்கு தேவையான பின்புலம் தயாரித்தல்.
- கடற்றொழில் பிரிவின் அபிவிருத்திக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு அது சார்பான நிறுவனங்களுடன் முறையான தொடர்பினை ஏற்படுத்தல்.
- தேசிய மற்றும் வெளிநாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி கடற்றொழில் துறையில் நடைமுறைப்படுத்தும் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்ட சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை விஞ்ஞான ரீதியாக தேடிப் பார்த்தல் மற்றும் ஆய்வின் பெறுபேறாக நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறையான விரிவாக்கல் சேவையின் ஊடாக மீனவ சமூகத்தினர்களுக்கு கொண்டு செல்லல்
- கடற்றொழில் அபிவிருத்தி வேலைத் திட்டம், விரிவாக்கல் மற்றும் வள முகாமைத்துவத்துக்கு மீனவ சமூகத்தினரின் பங்களிப்புக்கு முன்னுரிமை வழங்குதல், மற்றும் அதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற மற்றும் சமூக அமைப்புகளின் பங்களிப்பைப் பெறல்.
- பின் அறுவடையின் போது ஏற்படும் வீண் விரயத்தைக் குறைப்பதற்கு ஏற்றுமதி மற்றும் தேசிய மீன் உற்பத்திகளின் நிலை மற்றும் குணப் பண்புகளை மேம்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல் பயிற்சிகளை வழங்குவதற்குத் தேவையான நிறுவக அமைப்பை வலுப்படுத்தல்.
- மீனவ குடும்பங்களின் சமூக நிலையை மேம்படுத்துவதற்கு மீனவர்களின் மற்றும் மீனவப் பெண்களின் பூரண பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான பங்களிப்பினை வழங்குதல்.

## 1.4 பொறுப்புகள்

- மீன்பிடி நடவடிக்கை ஒழுங்குவிதிகள்,மீன்பிடி முகாமைத்துவ ஒழுங்குவிதிகள்,நீர்வாழ் உயிரினச் செய்கை முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் தயாரித்தல்,வெளியிடல், நெறிப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் படகுகள் பதிவு செய்தல், மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- கடற்றொழில் படகுகள் அடகு வைப்பது சம்பந்தமான நடவடிக்கை
- உயிர் மீன் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- வெளிநாட்டு படகுகளுக்கு மீன்களைத் தரையிறக்குவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கடற்றொழில் முகாமைத்துவம் சம்பந்தமாக அறிவூட்டுதலை மேம்படுத்தல்.
- மூலதனப் பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கான கடன் சம்பந்தமாக தொடர்பினை ஏற்படுத்தல்
- படகு உற்பத்தியாளர்கள், மீன்பிடி உபகரணங்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் படகு இயந்திர முகவர்களைப் பதிவு செய்தல்.
- படகு இயந்திர மற்றும் மீன்பிடி உபகரணங்களின் விலைமனு கோரி அதனை அனுமதி செய்தல்.
- கூட்டுறவு சங்கங்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் அவைகளுக்கு வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீனவ கூட்டுறவு அபிவிருத்தி செயற்றிட்டம் தயாரித்தல் மற்றும் மீனவ ‘‘இதிவர’’ வங்கி ஏற்படுத்தல்.
- மீனவ சமூகத்தினரின் அறிவூட்டுதலை விருத்தி செய்தல்.
- மீன்பிடிக் கைத்தொழிலுக்குத் தேவையான தரவுகள் சேகரித்தல்.
- வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மற்றும் கடலில் அநாதரவான கடற்றொழிலாளர்களை மீள இலங்கைக்கு கொண்டு வருதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் நிலையை பரிசீலனைக்கு உட்படுத்தல் மற்றும் மீன் தயாரிக்கும் இடங்களைப் பதிவு செய்தல், மீன் ஏற்றுமதி செய்வதற்கு தரச் சான்றிதழ் வழங்கல்.
- தேசிய நுகர்வுக்கு மீன் விற்பனை செய்யும் இடங்களின் நிலையை மேம்படுத்தல்.

## 1.5 அமைப்பின் வியூகம்

கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம் பணிப்பாளர் நாயகம் ஒருவரால் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கான பிரதான நடவடிக்கைகளை 06 பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

1. கடற்றொழில் முகாமைத்துவப் பிரிவு.
2. கடற்றொழில் தொழில்துறை பிரிவு.
3. கடற்றொழில் உற்பத்தி தரக் கட்டுப்பாட்டு பிரிவு.
4. படகு கண்காணிப்பு பிரிவு.
5. நிர்வாகப் பிரிவு
6. நிதிப் பிரிவு

இந்த பிரிவுகளின் நடவடிக்கை பணிப்பாளர்கள் நான்கு பேர் மற்றும் இரண்டு பிரதி/உதவிப் பணிப்பாளர்கள் மூலம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. கரையோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகங்கள் 15 நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், ஒவ்வொரு மாவட்டங்களின் நடவடிக்கை அந்தந்த மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரின் நடவடிக்கையின் கீழ் முன்னெடுத்து செல்லப்படுகிறது. மாவட்டத்துக்குள் கரையோர பிரதேசங்களை உள்ளடக்கியதாக கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் 133 அமைக்கப்பட்டுள்ளது. இந்த சகல பிரிவுகளுக்கும் கடற்றொழில் அலுவலகம் வீதம் நிறுவப்பட்டுள்ளது. கடற்றொழில் பரிசோதகர், கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர்கள் போன்ற அலுவலர்களினால் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுக்குள் சகல

கடற்றொழில் நடவடிக்கையையும் செயற்படுத்தி வருகின்றனர். அவ்வாறே கடற்றொழில் துறைமுகங்கள் சார்ந்ததாக தேடுதல், கண்காணிப்பு நடவடிக்கை நிலையங்கள் 20உம் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் வானொலி அலுவலர்கள் பகலிலும் இரவிலும் சேவை செய்து வருகின்றனர்.

## 1.6 கடல் மீன் உற்பத்தி மாவட்ட ரீதியாக

| தொ. இல. | மாவட்டம் | 2014 ஆம் ஆண்டின் வருடாந்த இலக்கு | 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றம். |
|---|---|---|---|
| | | மீன் உற்பத்தி மெற்றிக் தொன் | |
| 01 | கொழும்பு | 5450 | 6974 |
| 02 | களுத்துறை | 34650 | 22077 |
| 03 | காலி | 45050 | 52636 |
| 04 | மாத்தறை | 88615 | 30828 |
| 05 | தங்காலை | 56160 | 66158 |
| 06 | கல்முனை | 21335 | 20043 |
| 07 | மட்டக்களப்பு | 58810 | 30445 |
| 08 | திருகோணமலை | 53640 | 19602 |
| 09 | முல்லைத்தீவு | 12390 | 8303 |
| 10 | கிளிநொச்சி | 8425 | 19206 |
| 11 | யாழ்ப்பாணம் | 68105 | 31778 |
| 12 | மன்னார் | 30835 | 25929 |
| 13 | புத்தளம் | 43905 | 39374 |
| 14 | சிலாபம் | 27960 | 32988 |
| 15 | நீர்கொழும்பு | 70250 | 33051 |
| **மொத்தம்** | | **625,580** | **439,392** |

## 1.7 கடல் மீன் உற்பத்தி இன ரீதியாக

| மீன் இனம் | தொகை (மெ.தொ.) |
|---|---|
| தோரா | 30000 |
| பாரை | 29270 |
| பலயா | 61750 |
| கெலவல்ல | 45200 |
| ஏனைய இரத்த மீன்கள் | 59190 |
| தலபத் | -- |
| சுறா/ திருக்கை | 7440 |
| கல் மீன் | 34890 |
| கரைவலை மீன் | 108420 |
| இறால் | 23940 |
| சிங்கி இறால் | 1480 |
| நண்டு | 6450 |
| ஏனையவை | 51270 |
| **மொத்தம்** | **459,300** |

## 1.8 மாவட்ட ரீதியாக நாடளாவி செயற்படும் மீன்பிடிப் படகுகள்

| மாவட்டம் | | உள்ளிணை இயந்திர படகு | | | வெளியிணை இயந்திர படகு | | இயந்திர மற்ற | கரைவலை படகு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | IMUL | | IDAY | OFRP | MTRB | NTRB | NBSB |
| | | 50' அடிக்கு மேல் | 50' அடிக்கு கீழ் | | | | | |
| 01 | கொழும்பு | 14 | 43 | 26 | 324 | 01 | 303 | 24 |
| 02 | களுத்துறை | - | 427 | 03 | 400 | - | 371 | 32 |
| 03 | காலி | - | 440 | 18 | 479 | 285 | 331 | 60 |
| 04 | மாத்தறை | - | 1236 | 113 | 808 | 299 | 768 | 06 |
| 05 | தங்காலை | - | 643 | 38 | 991 | 182 | 898 | 101 |
| 06 | கல்முனை | - | 116 | 171 | 706 | 231 | 902 | 144 |
| 07 | மட்டக்களப்பு | - | 373 | 62 | 1301 | 07 | 3245 | 127 |
| 08 | திருகோணமலை | 14 | 110 | 51 | 2997 | 29 | 1578 | 251 |
| 09 | முல்லைத்தீவு | - | - | - | 1045 | - | 244 | 12 |
| 10 | கிளிநொச்சி | - | - | - | 619 | 119 | 183 | - |
| 11 | யாழ்ப்பாணம் | - | 47 | 200 | 3894 | 745 | 2965 | 153 |
| 12 | மன்னார் | - | 09 | 86 | 2348 | 398 | 565 | 14 |
| 13 | புத்தளம் | - | 50 | - | 2916 | 172 | 1546 | 187 |
| 14 | சிலாபம் | 03 | 364 | 01 | 2113 | 11 | 1554 | 14 |
| 15 | நீர்கொழும்பு | 05 | **353** | 100 | 1895 | 09 | 1697 | 34 |
| **மொத்தம்** | | **36** | **4211** | **869** | **22,836** | **2,488** | **17,150** | **1,159** |

## 1.9 2014.12.31ஆந் திகதியின் போது திணைக்களத்திற்குஅனுமதிக்கப்பட்ட சேவையாளர்கள் எண்ணிக்கை மற்றும் நிலவும் வெற்றிடம்

| பதவித் தொகுதி | | அனுமதிக் கப்பட்ட பதவிகள் எண்ணிக் கை | தற்போது ள்ள எண்ணிக் கை | வெற்றிடம் நிலவும் எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் (இல.நிர்.சே. விசேட தரம்) | 01 | 01 | - |
| 02 | பணிப்பாளர் (நிர்வாகம்) (இல.நிர்.சே.I) | 01 | 01 | - |
| 03 | பணிப்பாளர் (கடற். முகாமைத்துவம்)திணை. தரம் I | 01 | - | 01 |
| 04 | பணிப்பாளர் (கடற். தொழில்துறை) திணை. தரம் I | 01 | - | 01 |
| 05 | பிரதான கணக்காளர் (இல. கணக்காளர் சேவை I | 01 | 01 | - |
| 06 | பிரதான உள்ளக கணக்காய்வாளர்(இல.கணக். சேவை I | 01 | 01 | - |
| 07 | சட்ட அலுவலகர்( திணை. தரம் I/II) | 01 | 01 | - |
| 08 | கடலோட்டு பொறியியலாளர் (திணை. தரம் I/II/III) | 01 | - | 01 |
| 09 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) (இல.நிர்.சே.II/III) | 02 | 02 | |
| 10 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (கடற். தொழிலதுறை) திணை. தரம் II/III) | 01 | 01 | - |
| 11 | பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் (கடற். தொழில்நுட்பம்) திணை. தரம் II/III) | 02 | 02 | - |
| 12 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்( முகாமைத்துவம்) திணை தரம் II/III) | 02 | 02 | - |

| | பதவித் தொகுதி | அனுமதிக் கப்பட்ட பதவிகள் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் நிலவும் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 13 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (தரக்கட்டுப்பாடு) திணை தரம் II/III) | 02 | 02 | - |
| 14 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (மாவட்டம்) திணை. தரம் II/III) | 26 | 10 | 16 |
| 15 | சிவில் பொறியியலாளர் (இல. பொறி. சே.I/II/III) | 01 | 01 | - |
| 16 | கணக்காளர் ((இல்.. கணக்காளர் சே.II/III) | 02 | 01 | 01 |
| 17 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (விலங்கின உயிரியல்) (திணை. தரம் I/II/III) | 01 | 01 | - |
| 18 | பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (சமூக பொருளியல்) (திணை. தரம் II/III) | 01 | 01 | - |
| 19 | நிர்வாக அலுவலர் (ஒருங்கிணைந்த சேவை) | 01 | 01 | - |
| 20 | கடலோட்டு சமிக்ஞை (திணைக்களம்) | 04 | - | 04 |
| 21 | தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப அலுவலர் (இல. தகவல் தொழில்நுட்ப சேவை) | 02 | 01 | 01 |
| 22 | மொழி பெயர்ப்பாளர் (ஒருங்கிணைந்த சேவை) | 02 | 02 | - |
| 23 | வேலைத்திட்ட முகாமையாளர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 24 | தரக் கட்டுப்பாட்டு அலுவலர் (திணைக்களம்) | 10 | 07 | 03 |
| 25 | வரவு செலவு உதவியாளர் (இணைந்த சேவை) | 01 | 01 | - |
| 26 | கணக்கு உதவியாளர் (இணைந்த சேவை) | 01 | 01 | |
| 27 | சட்ட உதவியாளர் (திணைக்களம்) | 01 | 01 | 15 |
| 28 | வேலைத் திட்ட உதவியாளர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 29 | கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர் (திணைக்களம்) | 96 | 82 | 15 |
| 30 | கடற். வள முகாமைத்துவ உதவியாளர்(திணைக்) | 06 | 04 | - |
| 31 | அபிவிருத்தி உதவியாளர்(ஒருங்கிணைந்த சேவை) | 104 | 83 | 21 |
| 32 | கண்காணிப்பு அலுவலர் (திணைக்.) | 05 | - | 05 |
| 33 | தொழில்நுட்ப அலுவலர்(திணைக்.) | 01 | 110 | 33 |
| 34 | தொழில்நுட்ப உதவியாளர்(வலை உபகரணம் (திணைக்.) | 01 | - | 01 |
| 35 | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் (ஒருங்கிணைந்த சேவை) | 143 | 110 | 33 |
| 36 | கணணி தரவு குறிப்பாளர் (இல. தகவல் தொலை தொடர்பு மற்றும் தொழில் நுட்ப சேவை) | 02 | 02 | - |
| 37 | கடற்றொழில் அலுவலர் (திணைக்களம்) | 225 | - | - |
| 38 | திட்டமிடலாளர் (இல. தொழில்நுட்ப சேவை) | 01 | - | 01 |
| 39 | வேலை நிர்வாகி (இல. தொழில்நுட்ப சேவை | 01 | 01 | - |
| 40 | போக்குவரத்து அலுவலர் (திணைக்களம்) | 01 | - | 01 |
| 41 | பிரதான வானொலி அலுவலர் (திணைக்களம்) | 01 | 01 | |
| 42 | சிரேஷ்ட வானொலி அலுவலர் (திணைக்களம்) | 05 | 03 | 02 |
| 43 | கனிஷ்ட வானொலி அலுவலர் (திணைக்களம்) | 20 | 08 | 12 |

| பதவித் தொகுதி | | அனுமதிக் கப்பட்ட பதவிகள் எண்ணிக் கை | தற்போது ள்ள எண்ணிக் கை | வெற்றிடம் நிலவும் எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| 44 | கனிஷ்ட வானொலி அலுவலர் - கரையோரம் பேணல் திணைக்களத்திலிருந்து இணைக்கப்பட்டுள்ளது. | 42 | 40 | |
| 45 | கடற். அனுமதிப்பத்திர அலுவலர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 46 | கடல்சார் பொறியியல் உதவியாளர் (இல.தொ.சே.) | 15 | 09 | 06 |
| 47 | கடலோட்டு பொறியியல் உதவி. (திணைக்களம்) | 01 | 01 | - |
| 48 | கடற். சமூக அபிவிருத்தி உதவி. (திணைக்களம்) | 24 | 17 | 07 |
| 49 | கடற்றொழில பரிசோதகர் (திணைக்களம்) | 178 | 110 | |
| 50 | வரவேற்பாளர் (திணைக்களம்) | 01 | 01 | |
| 51 | சாரதி சேவை (ஒருங்கிணைந்த சேவை) | 25 | 21 | 04 |
| 52 | அலுவலக பணியாளர் சேவை (ஒருங்கி. சேவை) | 73 | 59 | 14 |
| 53 | தடுப்பு சார்ஜன்ட் (திணைக்களம்) | 02 | 01 | 01 |
| 54 | தடுப்பு படையணி (திணைக்களம்) | 03 | 03 | - |
| 55 | பஸ் நடத்துனர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 56 | விடுதி காப்பாளர் (திணைக்களம்) | 03 | - | 03 |
| **மொத்தம்** | | 1057 | 600 | 457 |

- வேலைத்திட்ட முகாமைத்துவ பதவி, இந்த அலுவலருக்கு தனிப்பட்ட ரீதியாக மட்டும்.
- கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர் பதவி – 6, இந்த அலுவலருக்கு தனிப்பட்ட ரீதியாக மட்டும்.
- கனிஷ்ட வானொலி அலுவலர் (கரையோரம் பேணல் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது) 42 பதவிகள்- இந்த அலுவலருக்கு தனிப்பட்ட ரீதியாக மட்டும்.
- கடற்றொழில் பரிசோதகர்கள் 178- இந்த அலுவலருக்கு தனிப்பட்ட ரீதியாக மட்டும்.
- கடற்றொழில் அலுவலர்கள் 225 உம் கடற்றொழில் பரிசோதக அலுவலர்களாக இணைத்துக் கொள்வதற்கு
- மொழிபெயர்ப்பாளர் - ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்றார்.
- வெற்றிடமாக நிலவும் பணிப்பாளர் (முகாமைத்துவம்) மற்றும் பணிப்பாளர் (தொழில்துறை) ஆகிய பதவிகளின் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) இரு அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- வெற்றிடமாக நிலவும் கணக்காளர் பதவி கடமை பதிலாக கடமையாற்றுவதற்கு ஏனைய கணக்காளரினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- வெற்றிடமாக நிலவும் 08 மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் பதவியின் கடமையுடன் சேர்த்து செய்வதற்கு கடற்றொழில் பரிசோதனை I தரத்திலுள்ள 08 அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 02. முகாமைத்துவ பிரிவு

## 2.1 நோக்கம்

இலங்கையில் கடற்றொழில் கைத்தொழிலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு மீனவ மக்களின் ஒத்துழைப்பின் ஊடாக கடல் கடனீரேரி, நீர்நிலைகளின் மீன் வளங்களைப் பாதுகாப்பதற்கு முகாமைத்துவத்தை மேற்கொள்வதே இப்பிரிவின் நோக்கமாகும்.

## 2.2 பொறுப்புகள்

இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு பின்வரும் விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இப்பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கடற்றொழில் விதிகள் ஆக்குதல் அதனை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் படகுகள் பதிவு செய்தல்.
- கடற்றொழில் படகுகள் அடகு வைத்தல்.
- கடற்றொழில் அனுமதிப் பத்திரம்வழங்குதல்.
- வெளிநாட்டு படகுகளுக்கு மீன்களை தரையிறக்குவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- அலங்கார மீன் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- சிங்கி இறால் பிடித்தல், தம்வசம் வைத்திருத்தல், கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- முத்துச் சிப்பி, சுறா பீலி கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- கரைவலைத் துறைமுகம்,உரிமையாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பததிரம் வழங்கல்.
- கடற்றொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.
- வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மற்றும் கடலில் அநாதரவான கடற்றொழிலாளர்களை மீள இலங்கைக்கு கொண்டு வருதல்.
- இடர்களுக்கு உட்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்குதல்.
- கடற்றொழில் முகாமைத்துவ பிரதேச கடற்றொழில் குழு மற்றும் அதிகார சபை நிறுவுதல் அந்த நிறுவனங்களின் மூலம் அபிவிருத்தி முகாமைத்துவ திட்டம் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல்.
- படகுத்துறை கடற்றொழில் அமைப்பு, படகுத்துறை முகாமைத்துவ குழு பிரதேச செயலாளர் பிரிவு/மாகாண பிரிவு தேசிய மட்ட குழு நிறுவுதல் மற்றும் அவ்வாறான அமைப்பின் மூலம் கடற்றொழில் அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல்.
- பல்தினக் கல ஓட்டிகளுக்கு பயிற்சி வழங்கல்.
- கடற்றொழிலாளர்கள் மற்றும் மீனவ பிரசைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல் மற்றும் மீளாய்வு.
- கடற்றொழில் பிணக்குளைத் தீர்த்தல்.
- ஆழ்கடலில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் படகுகளின் உரிமையாளர்கள், படகோட்டிகள், தொழிலாளர்களுக்கு சட்டதிட்டங்கள் மற்றும் பிராந்திய ஒப்பந்தங்களுக்குரிய பிரமாணங்கள் சம்பந்தமாக தெளிவுபடுத்தல்.
- கரையோர மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மற்றும் படகோட்டிகளின் பொறுப்புடைய கடற்றொழில் கைத்தொழிலுக்கு வழிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள பற்றி சம்பந்தமாக தெளிவுபடுத்தல்.
- ஆழ்கடல் மற்றும் கரையோர மீன்பிடிக் கைத்தொழிலுக்குரிய சட்டதிட்டங்கள் மற்றும் பிராந்திய பிரமாணங்கள் பற்றி கடற்றொழில் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் அறிவூட்டுதல்.

## 2.3 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

**2.3.1** சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைக்கு எதிரான சட்ட நடவடிக்கை மற்றும் 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள்

| சட்ட நடவடிக்கை | சாதனை |
|---|---|
| 1. சட்ட ஏற்பாடுகளை மீறுவதற்கு எதிரான சட்ட நடவடிக்கை-1996 இன் 2ஆம் சட்டம் | 127 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 2. மீன்பிடி தரவு சேகரிப்பு ஒழுங்குவிதிகள் (திருத்தம்) 2014 | சட்ட வரைஞரின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. |
| 3. கரைவலை ஒழுங்குவிதிகள்-1984 (திருத்தம்) | ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 4. வளைவலை ஒழுங்குவிதிகள்-1986 | சட்ட வரைஞரின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. |
| 5. ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கை 2014 1ம் ஒழுங்குவிதிகள் | சட்ட வரைஞரின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. |
| 6. துறைமுக அரசு மீன்பிடி நடவடிக்கை ஒழுங்குவிதிகள் | ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 7. ஈட்டித் துப்பாக்கி தடை செய்யும் ஒழுங்குவிதிகள் | சட்ட வரைஞரின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. |

2.3.2 தேசிய மற்றும் சர்வதேச சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கையை உறுதியான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செய்தல்

| நடவடிக்கை | முக்கிய செயற்பாடுகளின் சுட்டி | குறிக்கோள் | சாதனை பதிவு செய்யப் பட்டுள்ளது | முன் னேற்றம் |
|---|---|---|---|---|
| மீன்பிடிப் படகுகளைப் பதிவு செய்தல்(கடல்சார்) | முதற் பதிவு | 2,000 படகுகள் | 1,396 | 71% |
| மீன்பிடிப் படகுகளை மீளப் பதிவு செய்தல்(கடல்சார்) | பதிவைப் புதுப்பித்தல் | 50,000 படகுகள் | 32,253 | 65% |
| மீன்பிடிப் படகுகளைப் பதிவு செய்தல்(நன்னீர்) | முதற் பதிவு | 5,300 படகுகள் | 1,079 | 20% |
| மீன்பிடிப் படகுகளை மீளப் பதிவு செய்தல் (நன்னீர்) | பதிவைப் புதுப்பித்தல் | 14,500 படகுகள் | - | 0% |
| கடல்சார்ந்த மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் | மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கல் | 49,000 | 27,460 | 56% |
| | ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கல் | 3,000 | 4,877 | 163% |
| நன்னீர் மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் | நன்னீர் மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கல் | 5,000 | 262 | 5% |

| நடவடிக்கை | முக்கிய செயற்பாடுகளின் சுட்டி | குறிக்கோள் | சாதனை பதிவு செய்யப் பட்டுள்ளது | முன் னேற்றம் |
|---|---|---|---|---|
| ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான படிமுறை நடவடிக்கை பேணல் | IMUL படகுகளுக்கு விபரக் குறிப்பேடு வழங்கல் | 3,950 | 963 | 24% |
| | மீனவர்களிடமிருந்து பயண விபர அறிக்கை சேகரித்தல் | 29,760 | 5,883 | 21% |
| | படகோட்டி உரிமம் வழங்கல் | 2,000 | 1,201 | 60% |
| மீனவ அடையாள அட்டை வழங்கல் | மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கல் | 2,140 | 3,849 | 180% |
| கரைவலை அனுமதிப் பத்திரம் வழங்கல் | கரைவலை அனுமதிப் பத்திரம் வழங்கல் | 990 | 576 | 58% |
| அலங்கார மீன் முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல் | இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கல் | 75 | 66 | 88% |
| | ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் வழங்கல் | 70 | 78 | 111% |
| | மீன் ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் வழங்கல் | 05 | 01 | 20% |
| | போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கல் | 25 | 18 | 72% |
| சிங்கி இறால் முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல் | சிங்கி இறால் ஏற்றுமதி | 90 | 130 | 144% |
| | சிங்கி இறால் தம்வசம் வைத் திருப்பதற்கான் | 15 | 27 | 180% |
| சங்கு முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல் | சங்கு ஏற்றுமதி | 25 | 26 | 104% |
| | சங்கு எடுத்துச் செல்லல் மற்றும் தம்வசம் வைத் திருப்பதற்கான | 30 | 24 | 80% |
| கடலட்டை முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல் | கடலட்டை ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் | 70 | 30 | 43% |
| | கடலட்டை எடுத்துச் செல்லல் மற்றும் தம்வசம் வைத் திருப்பதற்கான் | 60 | 32 | 43% |
| ஏனைய முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல் | செயற்கை அடித்தள படிநிலை மீதான பண்டுபத்தப்பட்ட கடல் அங்கிகளின் ஏற்றுமதி | 10 | 11 | 110% |
| | இறந்த சிப்பிகளை எடுத்துச் செல்வதற்கான | 100 | 137 | 137% |
| | அலங்கார நோக்கத்திற்காக கடல் சிப்பிகளை எடுத்துச் செல்வதற்கான் | 40 | 43 | 108% |
| தரை இறக்குவதற்கான அனுமதிப் பத்திரம் | வெளிநாட்டு படகுகளுக்கு மீன் தரை இறக்கு வதற்கான | 250 | 159 | 64% |

# 03. கடற்றொழில் கைத்தொழில் பிரிவு

## 3.1 நோக்கம்

காலத்துக்கு ஏற்றதாக நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கடற்றொழில் கைத்தொழிலை உறுதியாக அபிவிருத்தி செய்தல், மீனவ கூட்டுறவுச் சங்கத்தை கடற்றொழில் வங்கியாக விருத்தி செய்தல், மீனவ மக்களின் சமூக நலன்புரி சேவையை மேம்படுத்துவதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது இந்தப் பிரிவின் நோக்கமாகும்.

## 3.2 பொறுப்புகள் கொண்ட கடமைகள்

- நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக கடற்றொழில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- மீனவ சமூகத்தினர்களுக்கு பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- மீனவ கூட்டுறவுச் சங்கம் மற்றும் 'இதிவர' வங்கி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் தேசிய மட்டத்தில் தொடர்புபடுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- கடற்றொழில் படகு உற்பத்தி, மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி படகுகளுக்கான இயந்திரம், மீனவ குளிரூட்டி, வள்ளச்சாலைகள், தொலைத் தொடர்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் இறக்குமதியாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் அவைகளின் விலைகளை அனுமதி செய்தல் அந்த அனுமதிப் பத்திரங்களை வருடாந்தம் புதிப்பித்தல்.
- படகு வடிவமைப்பு, ஏனைய உபகரணங்களின் வகை மற்றும் மாதிரிகளை அனுமதித்தல்
- பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளாகி கஷ்டத்திலுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கல்.
- எதிர்பாராதவிதமாக திடீர் விபத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளான மீனவ குடும்பங்களின் எழுச்சிக்கு வேலைத் திட்டங்களைத் தயாரித்தல் நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் சகல மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களை கண்காணித்தல்.
- வெளிநாட்டு உதவி பெற்று செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்.
- திணைக்களத்தின் விடயங்கள் சம்பந்தமாக செயற்படுத்தப்படும் திட்டங்கள் தயாரித்தல்.

## 3.3 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

### 3.3.1 "தியவர திரிய" இலங்கை வங்கி கடன் திட்டம்

"தியவர திரிய" எனும் செயற்றிட்டத்தின் ஊடாக குறைந்த வட்டியுடனான அபிவிருத்தி கடன் வசதி இலங்கை வங்கியினாலும், எமது திணைக்களத்தின் மூலமும் வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ரூபா 10 மில்லியன் வரையான கடன் எல்லை, மொத்தக் கடன்களின் அடிப்படையில் கணிக்கப்படும்.

வட்டி வீதம்

- ரூபா 2.00 மில்லியனுக்கு குறைந்தது 12%
- ரூபா 2.00 மில்லியனுக்குக் கூடியது 14%

வழங்கப்படும் ஒவ்வொரு கடனுக்கும் அரசாங்கம் 4% வட்டி மானியம் வழங்குகிறது.

106 பயனாளிகளுக்கு மொத்தப் பெறுமதியாக ரூபா 198.2 கடன் வழங்கப்பட்டுள்ளது.

967 கடன் விண்ணப்ப படிவங்கள் இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.3.2 கடற்றொழில் காப்புறுதித் திட்டம்

கடற்றொழில துறையின் அவதானத்தைக் குறைத்தல் மற்றும் நிதி உதவி பெற்றுக் கொள்வதற்காக மீனவர்கள் மற்றும் கடற்றொழில் படகுகளுக்கு காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தல்.

| | |
|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை | 20,435 |
| காப்புறுதி செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | 33,360 |

### 3.3.3 மீனவர் ஓய்வூதியத் திட்டம்

| | |
|---|---|
| புதிய மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் | -- |
| விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கான சேகரித்த சந்தா தொகை | 5043 |

### 3.3.4 மீனவர்களினதும், மீன்பிடிப் படகுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் நோக்கமாகக் கொண்டு மீன்பிடிக் கைத்தொழிலை விதிமுறைப்படுத்தல்.

| | |
|---|---|
| கடலோட்டுத் தரச் சான்றிதல் வழங்கல் | 12,977 |
| வள்ளச் சாலைகளின் முதற் பதிவு | 06 |
| வள்ளச் சாலைகளின பதிவைப் புதுப்பித்தல் | 21 |
| மீன்பிடி உபகரணங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் | 25 |

### 3.3.5 "திவி நெகும" (வாழ்வின் எழுச்சி) நிகழ்ச்சித் திட்டம்

மீன்பிடி அறுவடையின் பின்னரான தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம் திறம்பட செயற்படுத்தப்படுகிறது. இந்த "திவி நெகும" (வாழ்வின் எழுச்சி) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரனையுடன் அமுல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 10,000/- கடன் தொகை வழங்கப்படுகிறது.

- கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை - 1,025
- வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை - ரூபா 10.25 மில்லியன்

### 3.3.6 மாற்று எரிபொருள் மானியத் திட்டம்

2012 ஆம் ஆண்டு எரிபொருளின் விலை ஏற்றம் காரணமாக மீன்பிடி துறைக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன், எமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதும் மீன்பிடிக் கைத்தொழிலில் தொடர்ந்தும் இடைவிடாது ஈடுபட்டு வரும் இயந்திரப் படகுகளின் உரிமையாளர்களுக்கு எமது அரசாங்கம் எரிபொருளுக்கான மானியம் வழங்கி வந்தது. கடந்த ஆண்டு வழங்கப்பட்ட முறைக்குப் பதிலாக மிகவும் ஆக்க பூர்வமான மாற்றுத் திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், உயிர்காப்பு சாதனம் போன்றவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**1ஆம் கட்டம்**

| தொ. இல. | மாவட்டம் | வலைகள் (வலைகள் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை) | | உயிர்காப்பு மேலங்கி (உயிர்காப்பு மேலங்கிகள் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|
| | | (OFRP) | (MTRB) | (OFRP) | (MTRB) |
| 01 | மன்னார் | 1,179 | 0 | 2,358 | 0 |
| 02 | களுத்துறை | 253 | 0 | 506 | 0 |
| 03 | கல்முனை | 124 | 49 | 248 | 98 |
| 04 | மட்டக்களப்பு | 41 | 0 | 82 | 0 |
| 05 | மாத்தறை | 0 | 83 | 0 | 166 |
| **மொத்தம்** | | **1,597** | **132** | **3,194** | **264** |

**2ஆம் கட்டம்**

| தொ. இல. | மாவட்டம் | வலைகள் (வலைகள் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை) | | உயிர்காப்பு மேலங்கி (உயிர்காப்பு மேலங்கிகள் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை) | | வலைகளுடன் ஜி.பி.எஸ். (GPS) வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | (OFRP) | (MTRB) | (OFRP) | (MTRB) | |
| 01 | புத்தளம் | 215 | 29 | 432 | 58 | 01 |
| 02 | சிலாபம் | 286 | 0 | 572 | 0 | 0 |
| 03 | நீர்கொழும்பு | 412 | 0 | 824 | 0 | 0 |
| 04 | கொழும்பு | 191 | 0 | 476 | 0 | 47 |
| 05 | களுத்துறை | 47 | 0 | 102 | 0 | 94 |
| 06 | காலி | 218 | 204 | 446 | 408 | 05 |
| 07 | மாத்தறை | 284 | 122 | 568 | 244 | 0 |
| 08 | தங்காலை | 252 | 114 | 510 | 228 | 03 |
| 09 | மட்டக்களப்பு | 434 | 0 | 886 | 0 | 09 |
| 10 | திருகோணமலை | 424 | 0 | 888 | 0 | 20 |
| 11 | கிளிநொச்சி | 272 | 25 | 544 | 50 | 0 |
| 12 | முல்லைத்தீவு | 418 | 0 | 836 | 0 | 0 |
| 13 | யாழ்ப்பாணம் | 332 | 128 | 774 | 270 | 62 |
| 14 | மன்னார் | 167 | 284 | 334 | 568 | 0 |
| **மொத்தம்** | | **3,952** | **906** | **8,192** | **1,826** | **151** |

# 04. கடற்றொழில் உற்பத்தி தரக் கட்டுப்பாட்டு பிரிவு

## 4.1 நோக்கம்

ஐரோப்பிய வர்த்தக சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளுக்கு ஐரோப்பிய ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தேவைகளை நிறைவு செய்து உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இப் பிரிவு கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதுடன், 1999.01.04ஆந் திகதி முதல் செயற்பட்டு வருகிறது.

## 4.2 எதிர்பார்ப்பு

இந்த பிரிவின் பிரதான எதிர்பார்ப்பானது 1998இல் வெளியிடப்பட்ட மீன் உற்பத்தி ஒழுங்குவிதியை நடைமுறைபபடுத்துவதன் கீழ் இலங்கையின் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மனித நுகர்வுக்கான மீன் உற்பத்திகளின் குணப் பண்புகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் உறுதி செய்வதேயாகும்.

## 4.3. பொறுப்புகள்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அணுகுவதற்கு இப்பிரிவின் மூலம் பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

- மீன்களைக் கையாளும் நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- ஏற்றுமதி நடவடிக்கைக்காக மீன்களைக் கையாளும் நிறுவனங்களுக்கு மீன்கள் தயரிப்பதற்கு அதிகாரம் வழங்கல்.
- மீன்களைக் கையாளும் நிறுவனங்களை தொடர்ந்து பரிசோதனைக்கு உட்படுத்தல்.
- மீன்கள் தரையிறக்கும் இடங்களை பரிசீலனை செய்தல்.
- ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் படகுகளை பரிசீலனை செய்தல்.
- ஏற்றுமதிக்காக பயன்படுத்தப்படும் மீன்களை முறையாக பரிசீலனை செய்தல்.
- ஏற்றுமதி செய்யப்படும் சகல மீன் மற்றும் மீன் உற்பத்திகளுக்கு சுகாதர தரச் சான்றிதழ் (Health Certificate) வழங்கல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் பரிசீலனை அறிக்கை (Test Certificate) வழங்குவதற்கான பிரிசோதனைக்கு அனுமதி வழங்கல்.
- சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகள் அனுமதிக்கப்பட்ட பரிசோதனையளர்களின் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ மாதிரி பரிசோதனைக்கான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தல்.
- மீன்களைக் கையாளும் இடங்கள், படகு மற்றும் மீன்களைத் தரையிறக்கும் இடங்கள் ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள குறித்த நிபந்தனைகளுக்கு அனுகூலமற்ற சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமான சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளில் பாதுகாப்பற்ற சுகாதார நிலை சம்பந்தமாக கிடைக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் குணப் பண்புகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் வழங்கும் மீன்பிடிப் படகுகளின் பணியாளர் குழுவுக்கு மீன்களைக் கையாளுவது சம்பந்தமான வேலைத் திட்டம் ஏற்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- நீர்வாழ் உயிரினச் செய்கைகளுக்கு (இறால்) பயன்படுத்தும் மீள்உயிரிகள் பல வகைகள் மற்றும் இரசாயணத் திரவங்கள் மட்டுப்படுத்துவதற்கு நீர்வாழ் உயிரின் கண்காணிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் அறிவூட்டுதல்
- மீன்பிடிப்பதற்கான சான்றிதல் வழங்கல்.

## 4.4 2014இன் முன்னேற்றம்

### 4.4.1 மீன் உற்பத்தி தரக் கட்டுப்பாடு மற்றும் பின் அறுவடை வீண்விரயத்தைக் குறைத்தல்.

### 4.4.2 புதிய மீன்களைக் கையாளும் நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவைப் புதுப்பித்தல்

